ரூ.2,000 கோடியில் 'வெற்றி மடிக்கணினி' திட்டம்: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை, நவ.7: உயர்கல்வி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை (லேப்டாப்) வழங்கும் வெற்றி மடிக்கணினி திட்டத்தை ரூ.2,000 கோடியில் செயல்படுத்த முதல்வர் ச.ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்த தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாணவர்களின் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றம் என்ற உயர்ந்த நோக்கத்தில், கல்லூரி மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த வெற்றி மடிக்கணினித் திட்டத்தைச் செயல்படுத்திட முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார். இன்றைய எண்ம (டிஜிட்டல்) உலகில், உயர் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி என்பது இன்றியமையாதது. தொழில்நுட்ப அறிவு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, இணையவழிக் கல்வி, எதிர்கால வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு மடிக்கணினிகள் பெரிதும் உதவும்.

2026-27-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் வெற்றி மடிக்கணினித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

விடுபட்ட மாணவர்களுக்கும் மடிக்கணினி



முந்தைய 2025-26-ஆம் கல்வியாண்டில் மடிக்கணினித் திட்டத்தில் விடுபட்ட அரசு, அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள், தொழில்முறைப் படிப்புகளில் பயிலும் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களும் நிகழாண்டு திட்டத்தில் மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மேலும், பொறியியல் மாணவர்களின் தொழில்நுட்பக் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இன்டெல் கோர் - ஐ-5 செயலி அல்லது அதற்கு இணையான உயர்தரத் தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணினிகள் வழங்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

அரசாணைஃ இதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், நிதி ஒதுக்கீட்டிற்கு நிர்வாக ரீதியான அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

நிகழ் 2026-27-ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ), மருத்துவம், கால்நடை மருத்துவம், மீன்வளம், வேளாண்மை, சட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்விப் பிரிவுகளில் பயிலும் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மாணவர்கள் இந்த திட்டத்தில் பயனடைவர்.

உயர் நிலைக் குழுஃ இத்திட்டத்தை மிகச் சீரிய முறையில் கண்காணித்து, தொய்வின்றிச் செயல்படுத்திட முதல்வர் தலைமையில் உயர்நிலை வழிகாட்டுதல் குழுவும் அமைக்கப்படவுள்ளது. மேலும், தரக்கட்டுப்பாட்டுடன் கூடிய மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்வதை உறுதிசெய்ய தமிழ்நாடு மின்னணு நிறுவனத்துக்கு (எல்காட்) அனுமதி வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் (2011) சுமார் 50 லட்சம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு 'அம்மா மடிக்கணினி திட்டம்' பெயரில் தொடங்கப்பட்டது. திமுக ஆட்சியில் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 2025-26 நிதியாண்டில் ரூ.2,000 கோடி மதிப்பில் 20 லட்சம் மாணவர்களுக்கு, 'உலகம் உங்கள் கையில்' பெயர் மாற்றத்துடன் மடிக்கணினி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மின்கசிவால் குளிர்பதனப்பெட்டி வெடித்து வீடு தரைமட்டம்

சிறுவன் உயிரிழப்பு; பெற்றோர் உள்ளிட்ட 4 பேர் காயம்



விழுப்புரம் மாவட்டம், வீரசோழபுரம் கிராமத்தில் குளிர்பதனப்பெட்டி வெடித்ததில் தரைமட்டமான வீடு.

விழுப்புரம், நவ. 7: விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் அருகே மின்கசிவால் குளிர்பதனப்பெட்டி வெடித்ததில் வீட்டின் கட்டடம் இடிந்து தரைமட்டமானது. இதில் இடிபாடுகளில் சிக்கி 10 வயது சிறுவன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். மேலும், பெற்றோர் உள்ளிட்ட 4 பேர் காயமடைந்தனர்.

அரகண்டநல்லூர் அருகிலுள்ள வீரசோழபுரம் மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் ரா.மூர்த்தி (47). இவர், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் ஊர்க்காவல்படை வீரராகப் பணியாற்றி வருகிறார். மேலும் வீட்டின் முன் பகுதியில் பெட்டிக் கடையையும் நடத்தி வருகிறார். இவரது மனைவி சரண்யா (42), மகன் பத்ரிநாத் (10), உறவினர்கள் ரா.சுமதி (37), கா.பிரபு (38). பத்ரிநாத் அப்பகுதியிலுள்ள பள்ளியில் 5-ஆம் வகுப்பு படித்து வந்தார். சனிக்கிழமை காலை வீட்டில் சரண்யா சமையல் செய்து கொண்டிருந்தார். மூர்த்தி, பத்ரிநாத் மற்றும் உறவினர்கள் இருவர் என 4 பேர் வீட்டில் இருந்தனர். காலை 10.40 மணியளவில் வீட்டின் சமையல் அறையிலிருந்த குளிர்பதனப்பெட்டி திடீரென வெடித்ததாம். இதன் காரணமாக வீடு இடிந்து தரைமட்டமானது.

இந்த விபத்தில் வீட்டிலிருந்த பத்ரிநாத் இடிபாடுகளுக்குள் சிக்கி நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். மேலும் வீட்டுக்குள் இருந்த மூர்த்தி, சரண்யா, உறவினர்கள் சுமதி, பிரபு ஆகிய 4 பேரும் பலத்த காயமடைந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த அரகண்டநல்லூர் போலீஸாரும், திருக்கோவிலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வீரர்கள் நிகழ்விடம் சென்று, விபத்தில் உயிரிழந்த பத்ரிநாத்தின் சடலத்தை மீட்டு, உடற்கூறாய்வுக்காக விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், பத்ரிநாத்தின் தந்தை மூர்த்தி, தாய் சரண்யா ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன் இதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சுமதி, பிரபு ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன் திருக்கோவிலூரிலுள்ள மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து அரகண்டநல்லூர் போலீஸார் வழக்குப் பதிந்து, விசாரணை நடத்தி வருகின்றனர். போலீஸாரின் முதல்கட்ட விசாரணையில் மின்கசிவு காரணமாக குளிர்பதனப்பெட்டி வெடித்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவந்தது.

பெங்களூரில் கொலை செய்யப்பட்ட 7 பேரில் இருவரின் உடல்கள் ஏற்காடு வனப் பகுதியில் மீட்பு

எஞ்சிய உடல்களை தேடும் கர்நாடக போலீஸார்

ஏற்காடு, நவ. 7: பெங்களூரில் குடும்பத் தகராறு காரணமாக மனைவி உள்பட குடும்பத்தில் உள்ள 7 பேரைக் கொன்று ஏற்காடு வனப் பகுதியில் உடல்களை வீசியதாக கார் ஓட்டுநர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏற்காடு வனப் பகுதியில் இருந்து இரண்டு பேரின் உடல்களை தமிழக போலீஸார் உதவியுடன் கர்நாடக போலீஸார் சனிக்கிழமை மீட்டனர்.

கர்நாடக மாநிலம், பெங்களூரு ஸ்ரீராமபுரம் பாஷ்யம் சர்க்கிள் பகுதியைச் சேர்ந்தவர் இந்துசேகர் (52), கார் ஓட்டுநர். இவரது மனைவி சுனிதாவுக்கும் (40) இவருக்கும் நீண்ட நாள்களாக குடும்பத் தகராறு இருந்துள்ளது. இதனால் சுனிதா அடிக்கடி தனது தாய்வீட்டுக்குச் சென்று வந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, சுனிதாவின் குடும்பத்தினர் மீது இந்துசேகருக்கு வெறுப்பு ஏற்பட்டதால், மனைவியின் குடும்பத்தினரைக் கொலைசெய்ய திட்டமிட்டுள்ளார். அதன்படி, வீட்டில் இருந்த மனைவி சுனிதாவை ஆட்டுக்கல்லால் தலையில் தாக்கிக் கொலை செய்துள்ளார். பின்னர், அவரது உடலை துணியில் சுற்றி, சிக்கபள்ளாப்பூர் நந்தி ஹில்ஸ் பகுதியில் வீசியுள்ளார். தொடர்ந்து, தனது தொலைபேசியைச் செயலிழக்கச் செய்து, அருகில் இருந்தவர்களிடம் வெளியூருக்குச் சென்றிருப்பதாகக் கூறி நாடகமாடியுள்ளார்.

பின்னர், தனது மைத்துனர்களான சிவக்குமார் (30), சங்கர் (44) ஆகியோரை வீட்டுக்கு வரவழைத்து, ஆட்டுக்கல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளார். தொடர்ந்து, சங்கரின் மனைவி திவ்யா (30), சிவக்குமாரின் மனைவி நளினி (29), மாமியார் ரூபாவதி (65), சங்கரின் மகன் புனீத் (7) ஆகியோரையும் அதே முறையில் கொலை செய்து, வெவ்வேறு இடங்களில் உடல்களை வீசியுள்ளார்.

குடும்பத்தினர் அடுத்தடுத்து மாயமானதால், நளினியின் தாய் துரங்கம்மா அளித்த புகாரின்பேரில், பெங்களூரு ராஜாஜிநகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், இந்துசேகர் தனது மனைவி உள்ளிட்ட 7 பேரையும் கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து, இந்துசேகரை கைதுசெய்த போலீஸார், புனீத்தின் உடலை மீட்டனர். எஞ்சிய 6 பேரின் உடல்களை தேடிவந்தனர்.

இந்த நிலையில், சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பாதையை ஒட்டிய வனப்பகுதியில் சிலரின் உடல்களை வீசியதாக இந்துசேகர் போலீஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இதுகுறித்து சேலம் மாவட்ட போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, பெங்களூரு ராஜாஜிநகர் போலீஸார் அமைத்துள்ள தனிப்படையினர் சனிக்கிழமை ஏற்காடு வந்தனர். அவர்கள், ஏற்காடு போலீஸாரின் உதவியுடன் குறிப்பிட்ட வனப் பகுதியில் உடல்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இந்துசேகர் காரில் ஏற்காடு அடிவாரப் பகுதிக்கு வந்துசென்றது சிசிடிவி கேமராக்களில் பதிவாகியுள்ளதா என்றும் போலீஸார் ஆய்வு செய்தனர்.

2 உடல்கள் மீட்பு

இதனிடையே, ஏற்காடு வந்த கர்நாடக டிஎஸ்பி பிரபாவதி தலைமையிலான சிறப்புப் படை போலீஸார், சேலம் டிஎஸ்பி கபிலன், ஏற்காடு காவல் ஆய்வாளர் அமிர்தலிங்கம் ஆகியோருடன் சேர்ந்து ஏற்காடு நாகலூர் செல்லும் சாலையில் கடுக்காமரம் பகுதியில் உள்ள தனியார் காபி தோட்டத்தில் 30 அடி பள்ளத்தில் உடல்களை சனிக்கிழமை தேடினர்.

அங்கு, போர்வையால் சுற்றப்பட்டு கிடந்த இரண்டு மூட்டைகளைக் கைப்பற்றினர். அதில் இந்துசேகரின் மனைவி சுனிதா, அவரது மாமியார் ரூபாவின் உடல்கள் இருப்பது தெரியவந்தது. அழுகிய நிலையில் இருந்த உடல்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், கொலை செய்யப்பட்டு வீசப்பட்ட எஞ்சிய உடல்களையும் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இந்துசேகர், கடந்த அக்டோபர் 18 ஆம் தேதி இந்த இரண்டு உடல்களையும் ஏற்காட்டில் கொண்டுவந்து வீசியதாக போலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

டால்மியா பாரத் ரெஃப்ராக்டரீஸ் லிமிடெட்

Dalmia Bharat REFRACTORIES

CIN: - L26100TN2006PLC061254

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், அஞ்சல்: கல்லக்குடி - 621651, மாவட்டம்: திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

தொலைபேசி:-911123457100, இணையத்தளம்: www.dalmiaocl.com

செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

(ரூ.கோடியில், பங்குக்கான தரவு நீங்கலாக)

வ. எண்.	விபரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த அரையாண்டு		முடிந்த ஆண்டு
		30.09.2026	30.06.2026	30.09.2025	30.09.2026	30.09.2025	31.03.2026
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
	ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்						
1	தொடர் செயல்பாடுகளில் இருந்து மொத்த வருவாய்	215.50	167.55	71.70	383.05	119.03	324.33
2	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் / (நட்டம்) விதிவிலக்கு இனங்கள் மற்றும் நிறுவனத்தின் லாபம்/நஷ்டத்தில் பங்கு - தொடர் செயல்பாடுகள்	(76.04)	(63.85)	(43.68)	(139.89)	(63.07)	(204.69)
3	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம் / (நட்டம்) விதிவிலக்கு இனங்கள் - தொடர் செயல்பாடுகள்	(76.04)	(63.85)	(44.71)	(139.89)	(83.10)	(222.84)
4	இந்தக் காலப்பகுதிக்கான முழு வருவாய் (வரிக்குப் பிந்தைய காலப்பகுதிக்கான லாபம் மற்றும் பிற முழு வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கியது) - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(447.07)	(6.42)	(124.28)	(453.49)	(123.17)	(705.04)
5	செலுத்தப்பட்ட ஈக்குவிட்டி ஷேர் மூலதனம் (முகமதிப்பு ரூ.10/- / பங்கு)	45.88	45.88	44.20	45.88	44.20	45.88
6	மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக இதர ஈக்குவிட்டி	-	-	-	-	-	1,763.17
	இடைநின்ற வணிக செயல்பாடுகள்						
7	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் & விதிவிலக்கு இனங்கள் இடைநின்ற செயல்பாடுகளில் இருந்து	-	(0.08)	0.81	(0.08)	0.23	(0.34)
8	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம் / (நட்டம்) & விதிவிலக்கு இனங்கள் இடைநின்ற செயல்பாடுகளில் இருந்து	-	(0.08)	0.81	(0.08)	0.23	(44.15)
9	ஒரு பங்குக்கான வருமானம் (ரூ.10/- / பங்கு) (ஆண்டு விகிதத்தில் கணக்கிடப்படாதது)	-	-	-	-	-	-
	(அ) அடிப்படையானது மற்றும் நீர்க்கப்பட்டது - தொடர் செயல்பாடுகள்	(16.53)	(13.87)	(9.71)	(30.40)	(18.03)	(48.39)
	(ஆ) அடிப்படையானது மற்றும் நீர்க்கப்பட்டது - இடைநின்ற செயல்பாடுகள்	-	(0.02)	0.19	(0.02)	0.07	(9.62)
	(இ) அடிப்படையானது மற்றும் நீர்க்கப்பட்டது - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(16.53)	(13.89)	(9.52)	(30.42)	(17.96)	(58.01)
	தனித்த நிதிநிலை முடிவுகள்						
1	தொடர் செயல்பாடுகளில் இருந்து மொத்த வருவாய்	199.30	151.40	49.40	350.70	83.85	258.74
2	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம் / (நட்டம்) & விதிவிலக்கு இனங்கள் - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(75.60)	(64.21)	(49.56)	(139.81)	(74.51)	(219.97)
3	இந்தக் காலகட்டத்துக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம் / (நட்டம்) & விதிவிலக்கு இனங்கள் - தொடர் மற்றும் இடைநின்ற செயல்பாடுகள்	(75.60)	(64.21)	(49.56)	(139.81)	(74.51)	(219.97)

குறிப்புகள்:

1. மேற்படி நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டபின், நவம்பர் 06, 2026-ம் நாளில் நடத்தப்பட்ட அவர்களது ஆய்வுக் கூட்டத்தில் இயக்குனர்கள் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும். இந்த நிதிநிலை முடிவுகள் குறித்து சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மாறுபாடுகள் அற்ற தணிக்கை கருத்தை வழங்கினர்.
2. மேற்படி அறிக்கையானது, SEBI (கடமைகளை வரிசைப்படுத்துதல் மற்றும் கணக்குக்காட்டும் தேவைகள்) ஒழுங்காற்று முறைகள் 2015-ன் ஒழுங்குமுறை 33-ன் கீழ், பங்கு பரிவர்த்தனை நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்ட செப்டம்பர் 30, 2026 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சாராம்சமாகும். முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத முழு வடிவம், பங்குப் பரிவர்த்தனை நிறுவனங்கள் வலைத்தளம் www.msei.in மற்றும் www.cse-india.com மற்றும் மேலும் நிறுவனத்தின் வலைத்தளம் www.dalmiaocl.com. ஆகியவற்றில் கிடைக்கும்

டால்மியா பாரத் ரெஃப்ராக்டரீஸ் லிமிடெட்-க்காக
ஒம்/-
சந்திர நரேன் மகேஸ்வரி
முழுநேர இயக்குநர் & தலைமைச் செயல் அலுவலர்
DIN: 00125680

இடம்: புது தில்லி
தேதி: நவம்பர் 06, 2026

वस्त्र मंत्रालय MINISTRY OF TEXTILES

राष्ट्रीय परीक्षा एजेंसी National Testing Agency

राष्ट्रीय फैशन प्रौद्योगिकी संस्थान
निफ्ट अधिनियम 2026 द्वारा शासित एक सांविधिक संस्थान
NATIONAL INSTITUTE OF FASHION TECHNOLOGY
A Statutory Institute Governed by the NIFT Act 2006



NIFT ADMISSIONS 2027

Undergraduate Programmes
Postgraduate Programmes
Doctoral Programmes

REGISTRATION OPEN

LAST DATE FOR REGISTRATION
16th November 2026

ENTRANCE EXAM FOR UG/PG
10th January 2027

APPLY ONLINE AT
https://nift.ac.in
https://exams.nta.nic.in/niftee/

EXAMINATION CENTRES IN 100 CITIES PAN INDIA

வரி விளம்பரம்

JOB OPPORTUNITIES

TEACHERS WANTED

St. Christopher's College of Education
63, E.V.K. Sampath Road
Vepery, Chennai-7.

Applications with copies of certificates and testimonials should be sent to the Principal on or before 23.11.2026 for the following Posts

I. Assistant Professor (Approved Posts)
• Education • History
• Geography • Home Science
(Qualifications: UGC Norms)

II. Non -Teaching (Approved Posts)
• Junior Assistant • Assistant
(Qualifications: State Govt. Norms)

Contact Number: 98401 37087
E mail ID: stchristopherscollege@gmail.com

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

மணமேடை

மணமகன் தேவை

Suitable Match

For Graancee Mathew, Latin Catholic Christian girl, born 1996, B.Tech, working as Electrical Officer with Carnival Cruises, UK (Merchant Navy). Residing at Kizhakkambalam, Ernakulam. Parents retired. Proposals invited from well-educated, career-oriented grooms.

Contact: +91 7012247887

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)

equitas SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002 போன்: 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு சண்முகம் K C/o திரு கந்தசாமி, திரு ஆறுமுகம் K C/o திரு கந்தசாமி, திருமதி கௌசல்யா K C/O திரு கண்ணுசாமி, திருமதி மகாராணி S C/O திரு சண்முகம், திருமதி சிவசாமி K C/O திரு கந்தசாமி, அனைவரும் வசிப்பவர்கள்: 398 மேட்டுக்காடு தோட்டம் சித்தர், கேசரி மங்கலம், ஈரோடு, தமிழ்நாடு, 638311, திருமதி கோமதி A C/O திரு ஆறுமுகம் 328 மேட்டுக்காடு தோட்டம் சித்தர், கேசரி மங்கலம், ஈரோடு, தமிழ்நாடு, 638311	ஈரோடு பதிவு மாவட்டம், அம்மாபேட்டை சார்-பதிவாளர் அலுவலகம் (S R O), பவானி வட்டம், கேசரிமங்கலம் கிராமம், நத்தம் மறு சர்வே எண்.58/4B மற்றும் மறுசர்வே எண்.58/42 ஆகிய வற்றில் அமைந்துள்ள, மொத்தம் 0.0920 சதுர மீட்டர் (9899.2 சதுர அடி) பரப்பளவு கொண்ட நிலம். இதன் நான்கு எல்லைகள்: வடக்கு - பஞ்சாயத்து சாலை; தெற்கு - சுப்பிரமணிக்குச் சொந்தமான சொத்து; கிழக்கு - சுப்பிரமணிக்குச் சொந்தமான சொத்து; மேற்கு - சுப்பிரமணிக்குச் சொந்தமான சொத்து.	ரூ.30,00,000/- ரூ.3,00,000/- ரூ.10,000/-	28.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEBAVAN0415707 18.12.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.30,29,376/- மேலும் 19.12.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (04.11.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.36,03,134/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, மோகன்ராஜ் 9750325375, பிரவீன்ராஜ் 9655080981				
திரு குருவாயூரப்பன் காளியப்பன், திருமதி தமிழ்செல்வி குருவாயூரப்பன், இருவரும் வசிக்கும் இடம்: 45323, மாமரத்துப்பட்டி, தென்குமாரபாளையம் பொள்ளாச்சி, தென்குமாரபாளையம் B.O- கோயம்புத்தூர், தமிழ்நாடு, 642107	திருப்பூர் மாவட்டம், கோமங்கலம் சார்-பதிவாளர் அலுவலக எல்லை, ஆனைமலை வட்டம், தென்குமார பாளையம் கிராமம், மாமரத்துப்பட்டி நத்தம், பழைய சர்வே புல எண் 130/1A -ல் அடங்கிய புதிய சர்வே புல எண் 130/1A 1-ல் அமைந்துள்ள, மொத்தம் 168 சதுர மீட்டர் (அல்லது 1808.352 சதுர அடி) பரப்பளவு நிலம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; எல்லைகள்: வடக்கு - ஆறுமுகம் அவர்களின் வீடு; தெற்கு - காலி மனை; கிழக்கு - பொதுக் கிணறு; மேற்கு - தெற்கு-வடக்கு பாதை.	ரூ.8,50,000/- ரூ.85,000/- ரூ.10,000/-	28.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009398349 / 600000010653 27.09.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.8,39,051/- மேலும் 28.09.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (05.11.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.11,12,256/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, லியோ டேவிட் 9489484542, பிரவீன்ராஜ் 9655080981				
தேவேந்திரன், ஜனனி D, காளிமுத்து M, அனைவரும் வசிக்கும் இடம்: 15/126, விஸ்வநாதநாஸ் காலனி, அண்ணா நகர் பல்லடம், கோயம்புத்தூர், தமிழ்நாடு - 641664.	திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணைப் பதிவு மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் கிராமத்தில், பட்டா எண் 668-இன்படி நத்தம் பழைய சர்வே எண் 390/2A மற்றும் புதிய மறுஅளவீட்டு சர்வே எண் 558/6 ஆகியவற்றை உள்ளடக்கிய, அதன் மீது கட்டப்பட்ட கட்டிடத்துடன் கூடிய 872 சதுர அடி பரப்பளவுள்ள மனை எண் 23.	ரூ.33,50,000/- ரூ.3,35,000/- ரூ.10,000/-	28.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009345237 / 600000029970 20.05.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.42,33,985/- மேலும் 21.05.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (05.11.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.47,11,901/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித் குமார் 8190005434, அலெக்ஸ் சாமுவேல் 7402143823, பிரவீன்ராஜ் 9655080981				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 27.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

கனரா வங்கி Canara Bank
A Government of India Undertaking
Syndicate

விற்பனை அறிவிப்பு

கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கோயம்புத்தூர்

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான / ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, கனரா வங்கியின் கோயம்புத்தூர் கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் (கீழே பட்டியலில் குறிப்பிடப்பட்டபடி) செய்து கொள்ளப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக, 'எங்குள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி' என்கிற நிலையில் கீழ்வரும் விபரப்படி விற்பனை செய்யப்படுகிறது.

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : (1) திரு.A.ஞானதுரை (கடன்தாரர்), த/பெ.அருள் சாமுவேல், கதவு எண்.117, மேட்டுப்பாளையம் சாலை, சாய்பாபா காலனி, கோயம்புத்தூர் - 641043. **மேலும் வசிக்கும் முகவரி:** சைட் எண்.33, சரவணா நகர், கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் - 641025. **(2) திரு.A.ஜெயபால் (உத்தரவாதமளித்தவர்), த/பெ.P.அருள் சாமுவேல்,** கதவு எண்.130 4, வார்டு எண்.53, செல்வபுரம் தெற்கு, கோயம்புத்தூர் - 641026. **மேலும் வசிக்கும் முகவரி:** சைட் எண்.33, சரவணா நகர், கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர் - 641025.

31.10.2026 தேதி வரையில் நிலுவைத் தொகை : ரூ.26,46,696.81/- (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஆறு மற்றும் எண்பத்து ஒரு பைசா மட்டும்) மேலும் வட்டி மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர கட்டணங்களுடன்.

சொத்து விபரம் : சொத்தின் உரிமையாளர் : திரு.A.ஞானதுரை, த/பெ.அருள் சாமுவேல் : கோயம்புத்தூர் வடக்கு பதிவு மாவட்டம், வடவள்ளி சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுகா, கவுண்டம்பாளையம் கிராமம், S.F.No.174/2 புஞ்சை ஏக்கர் 5.36 இதில் கிழக்குப் பகுதி புஞ்சை ஏக்கர் 0.74, S.F.No.178/2A, புஞ்சை ஏக்கர் 2.38, S.F.No.178/2B2 புஞ்சை ஏக்கர் 2.88 ஆகியவற்றுடன் சேர்த்து மொத்தம் புஞ்சை 6.00 ஏக்கர் நிலம் மற்றும் அதற்கு அருகாமையிலுள்ள இதர நிலங்கள் அனைத்தும் மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு, சென்னை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் 04.02.2002 தேதியிட்ட No.L.P/R(C.P.N) No.18/2002 ஒப்புதலின்படி அங்கீகரிக்கப்பட்டு, அதற்கு சரவணா நகர் (வடக்கு) என்று பெயரிடப்பட்ட மனைப்பிரிவில், மேற்குப் பகுதி நிலமான மனை எண்.33-க்கு உள்ள எல்லைகள்: மனை எண்.33-ன் விற்கப்பட்ட பகுதியின் நிலத்திற்கு மேற்கு, 23 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்கு மனைப்பிரிவு சாலைக்கு வடக்கு, அங்காடி நிலத்திற்கு தெற்கு, 60 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு மனைப்பிரிவு சாலைக்கு கிழக்கு. இதன் மத்தியில், வடக்கு பகுதியில் கிழக்கு-மேற்காக 32 அடி 06 அங்குலம், தெற்கு பகுதியில் கிழக்கு-மேற்காக 50 அடி 06 அங்குலம், கிழக்கு பகுதியில் வடக்கு-தெற்காக 41 அடி, மேற்கு பகுதியில் வடக்கு-தெற்காக 42 அடி 06 அங்குலம், மற்றும் தென்மேற்கு மூலை கிராஸ் 05 அடி என்ற அளவுகளுடன் கூடிய மொத்தம் 1733 சதுர அடி அல்லது 03 சென்ட் 426 சதுர அடி நிலமும், அதில் அமைந்துள்ள கட்டிடமும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கதவுகள், ஜன்னல்கள், குளியலறைகள், குடிநீர் குழாய் இணைப்பு, மின்சார சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத்தொகைகள் போன்ற அனைத்து சாதனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய அனைத்து அனுபந்தங்கள் சகிதம். மேலும் மேற்படி சொத்திற்கு செல்வதற்கான மனைப்பிரிவு மற்றும் அனைத்து பொதுவான சாலைகளின் வழித்தட உரிமைகள் சகிதமான சொத்து. வார்டு-C(049) கவுண்டம்பாளையம், பிளாக்-13, T.S.No.28. இந்த சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் அமைந்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,02,60,000/- முன்வைப்புத் தொகை : ரூ.10,26,000/- ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/-

முன்வைப்புத் தொகை (EMD) செலுத்த கடைசி நாள் : 27.11.2026 காலை 11.00 மணிக்கு முன்பாக | சுவாதீன நிலை : அடையாள சுவாதீனம்

மின் - ஏலத் தேதி மற்றும் நேரம் : 27.11.2026, காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை (ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அளவிலான அளவற்ற நீட்டிப்புகளுடன் - விற்பனை நிறைவு பெறும் வரை)

மேற்கண்ட சொத்துக்களை பார்வையிடும் நாள் மற்றும் நேரம் 12.11.2026, காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு மின்-ஏலத்தோடு தொடர்புடைய கனரா வங்கியின் இணையதளத்தின் (www.canarabank.com) 'இ-ஆக்ஷன் லிங்க்' கில் அணுகவும் அல்லது கனரா வங்கியின் கோயம்புத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளையின் முதன்மை மேலாளரை / அதிகாரபூர்வ அதிகாரியை எந்தவொரு வேலை நாளிலும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். (போன் : 0422-2549459 / 2555655 / 94890 43584); மின்னஞ்சல் : cb4712@canarabank.com

மின் ஏலம் நடைபெறும் இணையதளம் : https://baanknet.com/

தேதி : 05.11.2026
இடம் : கோயம்புத்தூர்

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி